1023

பரமதேவநாயகி பேரில்

பலசந்தமாலை.

இஃது

ஸ்ரீமத். பண்டித

M. P. மஸ்கரீனாஸ் பாலபாரதியவர்கள்

இயற்றி

தூத்துக்குடி ஸ்ரீமான்

P. T. P. பிரான்சீஸ் பூபாலராயர் அவர்களின்

பொருளுதவியால்

அச்சிடப் பெற்றது.

Printed at the S. P. Press,

TUTICORIN.

1922.

O6:A17
N22

✝

பரமதேவநாயகிபேரில்

பலசந்தமாலை.

இஃது

ஸ்ரீமத். பண்டித

M. P. மஸ்கரீஞாஸ் பாலபாரதியவர்கள்

இயற்றி

தூத்துக்குடி ஸ்ரீமான்

P. T. P. பிரான்சீஸ் பூபாலராயர் அவர்களின்

பொருளுதவியால்

அச்சிடப் பெற்றது.

Printed at the S. P. Press,

TUTICORIN.

1922.

Nihil obstat: T. Roche, S J., cens. *dep.*
Imprimatur: ✠ AUGUSTINUS, S. J., *Ep. Trichinopoly.*
27—7—22,

பரம தேவநாயகி பேரில், பலசந்தமாலை.

காப்பு.

நேரிசை வெண்பா.

பானே யுடையாகப் பைம்மதியே காலணியாய்
மீனே முடியாக வேய்அணைமேல்—யானோர்
பலசந்த மாலை பகர்ந்திடுவேன் அன்னாள்
நலசந்த மென்மலர்த்தாள் நம்பி,

நூல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

அருவனாங் கடவுள் இந்த அவனிசெய் பவத்தைப் போக்கப்
பரிவினால் நினைந்து வானோர் பரமஅம் முறைகண் டஞ்ச
உருவனில் தரணி தோன்ற உலகுகொள் இயல்பொன் றில்லாக்
கருவினில் கனிமை குன்றாப் கழல்மலர்த் துணைதந்தாளே. (1)

உன்னரும் வலமை யாதி உயர்வரத் தொகுதி யெல்லாம்
பின்னமில் மொழிவான் உன்னிப் பிள்ளையான் வந்த துண்மை
அன்னவை ஆயுங் காலை அரிதரி தளியன் சொல்லத்
தன்னருங் கருணை யொன்றே தக்கதோர் உதவி யாமால். (2)

பல்லவாங் கலையில் தேர்ந்து பங்கமில் கீர்த்தி யார்பா
வல்லர்முன் புகழ்ந்தால் என்ன வண்டமிழ்த் தெரிந்தி லாதோர்
புல்லன்அவ் வழியே செல்லல் பொருந்துமோ பொருந்த ஞானம்
இல்லையுன் அருளையின்றி எவர்தயை புரிவா ரம்மா. (3)

முற்றுமிங் குணர்ந்தார் உண்டோ முளரியம் பதத்தைச் சேர்ந்து
கற்றைவெண் மதியிற் கூடக் கறைவதிந் ததுவும் பொய்யோ
சிற்றறி வுடையா னென்ன செகமெனைச் சிரித்தல் நன்றே
குற்றமே பொறுத்தாங் கெய்த் குணம்கொளல் கடமை யன்றோ 4

மழைதயை அனையின் பேரில் வழங்கிய கவியா மென்னத்
தொழுதகு கலைஞர்கூட்டம் தொகுப்புற அறிந்த பின்னும்
பிழைபிழை யென்றெந் நாளும் பேரொலி முழக்கு வாரோ
விழைவுறு கருணையாமோ மெய்த்தயைக் குரிமை கொல்லோ. (5)

காப்பியக் கலித்துறை.

எல்லாம் ஈந்திங் கின்பொடு காக்கும் இறையோனைச்
செல்லார் வெல்லை சேயெனநல்கிச் சிறியேன்செய்
பொல்லா வெய்ய வல்வினை போகப் புரைபோகக்
கல்வா ரியிலார் உயிர்தர வருள்தாய் காவாயோ. (6)

வான்றோய் அமரர் தொகுதியும் அறியா வடிவானை
ஊன்றோய் எனைநேர் உருவென ஈந்தாய் உக மூன்றும்
மூன்றே விரலால் தாங்குயர் வலமா முதல்வோனைக்
கான்றோய் கமலக் கரமிசை யேந்தக் காணேமோ. (7)

அல்லும் பகலும் யான்படு துயர்கட் களவுண்டோ
நல்லாய் யார்க்கும் தஞ்சம தென்ன நவில்வாரால்
கல்லோ நின்றன் உளமதி ரும்போ கவினுரும்
வில்வாய் சோமற் பதமலர் சரணம் வினைதீரே. (8)

அள்ளக் குறையா துவர்புல வறுநின் அருள்நீரைப்
பிள்ளைக் கீந்தென் உயிர்புர வாதே பிறைதாளீ
தள்ளிப் போபோ என்றுரை செய்தல் தகவாமோ
கள்ளற் கந்நாள் கதிதரு முறைமை கருதாயோ (9)

தாயும் நீயே தம்பமும் நீயே தமியேற்கின்
ஆயுள் நீயே யென்வினை மாற்ற அருகாள்நீ
சேயாம் எனைநின் மலர்விழி நோக்கில் சிறியேற்கெய்
ஓயா மிடிமை ஓடிடும் அம்மே உபகாரீ. (10)

கலிவிருத்தம்.

சோதியுடை தாரைமுடி சோமனடி நாரீ
யாதலமு மேபுகழும் ஏகபரி பாலீ
ஆதியதம் ஏவைபுரி பாதகம் அகல்வான்
நாதனையொர் சேயிறரு நாயகி தயாளீ. (11)

ஆட்டியருள் ஆசிபெறும் அற்புத குணனீ
தோட்டலர் துணர்க்கொடிகொள் சூசையின் மணளீ
தீட்டரிய ஞானமறை தேசுல்வு வேலீ
கேட்டினை யொழிக்கவல கீர்த்தி பிரதாபீ. (12)

பரவுக மடங்கிலொரு பரிவிலுயர் இறையைத்
திருவயி றடக்குனது திறன்மொழிய வலரார்
அர்வவடி வுறுகொடிய அலகைமிதி அமணீ
இருள்மடிய வருமிரவீ எழில்விடியல் உடுநீ (13)

அருளது சுரந்துபல அகிலபுர வலனைப்
பொருவிலமு துதவிவளர் பொலனனைநீ யலவோ
திரைபடு துரும்புறழ் கறங்குமென துாசிர்
மருமலரு செவியிலினம் வந்துபுக விலையோ. (14)

உனதுரிய மதலையென ஓடிவரும் இவனை
எனதுமக னலவெனநீ யிசைதருதல் முறையோ
வினையகல வெழுபரம சுதனிடம் விளம்ப
இனியதருண் இதனையற எதுவுமிலை அனையே. (15)

எழுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்.

களியினை விளைத்துக் கலியொழித் தெழிலார்
கதியெமக் கமைத்தநற் கனியே
மிளிர்மணி அலைவேய் புவியொடு சுடர்வாழ்
மீதலம் தொழவரும் இறைவி
ஒளிஇருட் டிடினும் கனல்குளிர் தரினும்
ஒலிகடல் முழுதும்வற் றினும்யான்
அளிமதி யொருவா பதமொரு பொழுதும்
அகன்றிடேன் அகன்றிடேன் அபயம். (16)

தொட்டிலில் பசியால் பதைத்தழு குழவி
தொனியினைக் கேட்டதாய் சிசுவைக்
கட்டியங் கணைத்தும் முத்தமி திட்டும்
கனிவுற அமுதினை யளித்தும்

அட்டியில் உதவி பற்பல புரிந்தும்
　　ஆதரித் தகமகிழ் வளலோ
இட்டவந் தழுமென் குரல்செவி புகவும்
　　கிருபைநீர் இனுந்தரா தெனவோ. (17)

பாதமூர் மதிபோல் தனித்தனன் யானும்
　　பதுமமெல் லடிகள்தாங் கேனே
மாதர்பூங் குழலார் வண்டெனக் குடைந்துன்
　　புகழ்சொலி மதுவையுண் ணேனே
போதமார் தவிது கோன் அரண் மனையே
　　புதல்வனை யீன்றும் ஓர் கனியே
கோதிலுன் உறவைத் தரித்த இங் நகரக்
　　கொல்லையில் பைம்புல் ஆகேனே. (18)

பிள்ளைதன் குறையைத் தாயறி யாதே
　　பிறிதெவர் அறிவர்சொல் அறிந்தும்
தள்ளைபோல் எவரோ உரித்தொடு மகனைத்
　　தாபரித் தருள்தர அருகர்
ஒள்ளிய உரிமை சொல்லுவர் பலரிங்
　　குறையினும் எளியவர்க் கிரங்கும்
தெள்ளிய சுகுணம் இல்லையே அவர்பால்
　　செல்லுவ தென்பயன் தெரியேன். (19)

பருந்தயில் உகிர்கொண் டழுந்துறப் பிடித்த
　　பசுங்கிளி பதறிநைந் துருகித்
திருந்த "என் மரியே புரந்தருள்" எனலும்
　　சீர்துணை புரிந்ததும் இலையோ
அருந்தவம் இயற்றத் தெரிந்திலன் சிறியன்
　　அதற்கெதிர் நோக்கிடில் அறமோ
பெருந்தயை மழையில் எனக்குமோர் திவலை
　　பெய்திடக் கருணைசெய் அனையே. (20)

கலி விருத்தம்.

விரதகுண சுகிர்தமுறை விமலநெறி அனைநின்
மரைமென்கழல் துணையாகநீ அருளாயெனில் மகன்யான்
புரிநன்மழை யிலதோர்பயிர் புகநின்றன நிலையுள்
திரிவதற வழிவேறிலை கதிவேறிலை திருவே. (21)

மின்னாரவர் மயலால்உள முடைவேன்உடல் மெலிவேன்
அன்னார்வதி திசையாதென அலைவேன்மதி யழிவேன்
தென்னார்நின தருள்பேருளி பெறுவான்விதி தெரியேன்
பொன்னாடமர்வகையேஎவன் அறிவேன்இழி புலையேன் (22)

அலகைகொடு வினையால்நின தடியேன்உறு துயரம்
நலதாய்முழு தறிவாய்அவை நவில்தல்அவ சியமும்
இலையேதயை புரியேல்முடி வென்னை எய்திய தருணம்
மலையேல்என மொழிவார்துணை தருவார்எவர் மரியே. (23)

சகலவித பொருளும்தர வலமாகுரு பரனுன்
மகவாய்உத வி அவன்மகிழ் அனையும்மகள் எனவும்
புகரில்கனி மையினில்வழு வனுவில்புக முறவும்
தகுபல்வர முடையாய்இது சமயம்நின தருள்தா. (24)

என்னேஇவன் உவர்தாழ்மொழி இனிமையிலை யெனவோ
அன்னேஎவளை செவிசாய்த்திலை அருமைக்குணம் நிறைதாய்
பன்னுங்குழல் தருமோதையில் பரிவோடவள் பெறுமோர்
பொன்னஞ்சிசு மழலைவெகு புநிதம் எனல் உணர்வேன். (25)

கலி விருத்தம்.

வானர் என்றும் வணங்கு பதத்தினை
மீனை ஒண்முடி வேயு சிரத்தினை
ஞானம் அற்ற நயம் அற்ற என்உளா
ஈனம் உற்றதென் றெண்ணுதல் நீதியோ (26)

அப்பன் தன்னை அருமகன் ஆக்கினை
கற்பறு வாக் கன்னியும் ஆயினை
தப்பு நச்சர வம்படு தாளினை
அற்பு மிக்க அழகுசெங் கோலினை. (27)

தந்தை இல்லன தாயும்ஒன் றில்லன
பெந்தும் இல்லன பேணுவர் இல்லன
சொந்தம் உள்ளன தூய்மைநன் குள்ளன
கந்தம் உள்ளநின் கால்எனக் குள்ளவே. (28)

மாலை வாங்கிமெய் மாலை அளித்தருள்
காலை வேந்தன்நின் காலைநீ வேண்டிடில்
ஓலம் இட்டழும் ஊழியன் நான் இவண்
ஆலை வாய்கழை ஆகித் தவிப்பனே. (29)

இன்ன வாறிங்கி ரங்கிப் புலம்பலும்
என்ன காண்நினக் கியாது குறையெனு
அன்னை கேட்டிலை யால்அந்தை யென்னுளம்
உன்னு தோறும் உலைமெழு காகும்மே. (30)

கலி நிலைத்துறை.

பங்க யக்கழல் மதிமுனர் பசுமைபூத் தரிய
கொங்கு யிர்த்திதழ் விரியவும் கொழுநறை குடித்தே
பொங்கும் ஆர்ப்புடன் வண்டுநின் புகழினை மிழற்றி
எங்கும் இத்தகை இனியதேன் இலையென இசைப்ப. (31)

வண்ட ரோடுமற் றுயிர்களும் இன்னணம் வழுத்த
அண்டர் மாதவர் முனிவரர் அர்ச்சயர் நினக்குத்
தெண்ட னிட்டடி பரவுவ சீரெலாந் தெரிந்தும்
கண்டர் யாரெனப் பிதற்றிடில் கதியெவா றடைவல். (32)

அம்மை நின்மடி யெனவரும் ஆதவன் அருகில்
கம்மி சைப்பொலன் முடிபுனை நளிர் உடுக் கணமே
செம்மை கெட்டிடா தொளிர்வதால் தேவியை அடைந்தோர்
இம்மி யேனும்எத் துன்பமும் எய்திலா தியல்பே. (33)

வெய்ய வொண்கதிர் வேந்தனை உடையென வேய்ந்தும்
நொய்ய பொன்னுடல் வாடிடா உண்மையை நுகர்வேன்
ஐய நுண்ணிடை அணங்குன தருட்கடல் குளிப்ப
மொய்யு வெங்கலைக் கதிரவன் பனித்தது முறையே. (34)

திங்கள் மீன்உயர் பான்முனர் திகழ்ஒளி யெரிப்ப
எங்கு எத்தருண் யாவர்கொல் கண்டனர் எல்லார்
நங்கை நீயெழும் தேர்மிசை நவின்றஇப் பொருள்கள்
அங்கை நெல்லியங் கனியென அவிர்வன அறிவேன். (35)

கலி விருத்தம்.

அருட்கொரு கடலினை அனிச்சம் பூவெனத்
திருக்கிளர் கழலினை சென்ம மாசிலே
மருட்டரு முப்பகை யொழித்த மாதெனு
ஒருப்பட உலகெலாம் உரைத்தல் பொய்க்குமோ. (36)

எந்தநாள் எளியெனுக் கிரங்கு நாளதோ
அந்தமார் நினதடி அபய மென்றியான்
வந்ததோர் சிசுவென வழுத்தல் கேட்டபின்
இந்தநீள் மௌனமும் எழிலதாங் கொலோ (37)

தந்தைதாய் சோதரர் தமரும் மாய்ந்தர் என்
அந்திநாள் என்றென அறிந்த தில்லையான்
எந்தநா ளாயினும் இறத்தல் நிச்சயம்
அந்தநாள் வந்தெனை அஞ்சல் என்பர்யார் (38)

வேரிலா மரமது வீழ்வ துண்மைநின்
பேர்துணை யன்றியான் பிழைப்ப தெங்ஙனம்
ஊரெலாம் உதவினும் உன்னைப் போல்எனக்
கார்துணை புரிகுவர் அருணன் ஆடையாய். (39)

கஞ்சமும் பகவில கதவு விள்ளுமோ
மஞ்சில பயிரினம் வளம் செழிக்குமோ
செஞ்சொலில் அவைக்களம் சிறக்கு மோநினைத்
தஞ்சமென் றடைந்திலர் தளிர்த்தல் சாலுமோ. (40)

அறுசீர்க்கழி நெடில் ஆசிரியவிருத்தம்.

புலியும் பசுவும் ஒருதுறையில் பொருந்திப் புனல்கொள் இந்நகர்
நலனை விளக்க வந்தவளே நவமா மணியே நறுமலரே
அலைசூழ் புவியும் பாதலமும் அமரர் உலகும் தொழுகிரண
நிலவு தவழும் கழலினையான் நீங்கேன் நீங்கேன் நீங்கேனே. (41)

தெள்ளு பவளம் தண்டரளம் திரைகொண் டொதுக்கு இந்நகர்
வெள்ளத் தலையை கருணைவளர் விரிந்த ஞானச் செழுஞ்சுடரே
உள்ளத் தமலர் உவகையெழ ஒருங்கே வணங்கி ஆர்ப்பரிக்கும்
வள்ள வனச மலரடியை மறவேன் மறவேன் மறவேனே. (42)

மின்னார் முகத்தால் குமுதமுகை விரியும் பொழில்சூழ் இந்நகர்ப்
பொன்னார் அணையில் வீற்றிருக்கும் புலமைக் கனியே பொக்கிஷமே
தொன்னேய்அழிப்பவல்லவட்கோர்தொண்டனளித்தல்பெருஞ்சுமையோ
ஒன்னார் இறைஞ்சும் பதத்துணையைஒருவேன்ஒருவேன் ஒருவேனே. (43)

பதுமோற் பலமே களையதெனப் பறிக்கும் வயல்வேய் இந்நகர்
அதிமா மதுர வாசனையை அள்ளி யிறைக்கும் கற்பகமே
நிதியற் றுழலும் வறியவர்க்கோர் திறனும் சுகமும் சேர்ந்தமைந்த
கதியாம் நினது தாள்மலரைக் கடவேன் கடவேன் கடவேனே. (44)

அணங்கேய் மகளிர் விழிமலராய் அளிகள் மருளும் இந்நகர்
அணங்கே தவிதன் அரண்மனையே அழகிற் கழகு புரிபவளே
அணங்கே யறுப்ப இவண்எழுந்த அமணீ யினும்நின் மௌனமென்னே
அணங்கே யமலைப் பொலனடியை அகலேன் அகலேன் அகலேனே. (45)

எழுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்.

அலைநின் ஒளிதிகழ் பதும மலரடி அளியன் உயரிய துணையென
கலைவெண் டிலாபுலை தரணி யொடுவளர் கசனர் உலகமும் அறியுமே
பனிகொள் காமுறை பரம னிடமொரு பதமிவ் வமயநீ மொழிதரின்
எனது துயர்முழு தொழியும் இதுநிசம் இறைவர் குலமெழு குமரியே. (46)

கலைவ லர்கள் அமர் சபையில் உறஅவர்கயவன் இவன்எனக் கடவமேன்
குலர்கள் எனவருபவரும் எனைஇழி குலன் இங் குறலென மொழிகுவர்
நிலையின் நிதியினர் வறியன் இவனென நிதமு மிகநகை புரிகுவர்
அலகில் வரமுயர் நினது தயவில அகிலர் உரிமையின் இயல்பிதே. (47)

கலையில் வலர்இவர் பொருளில் நிகரிலர் கழிவில் நிமிர்குலர் சனமெழும்
மலையை யுறழ்புய வலிமை யுடையவர் வடிவு நிறைபவர் எவருமே
அலையில் எழுதிய பொறியை மினவினை அனைய விரைவினில் அழிகுவர்
நிலையில் இனையபொய் யுயர்வை விழைகிலன் நிருபர் வழிவரு முதல்வியே.

அரிவை மயலெழு பிரியமிகுதியில் அணிகொள் கவிகளை அவர்மிசை
சொரிதல் தொழிலென நிதமும் அலைகுவன் சுருதி விதிகளில் நினைவிலன்
ஒருவர் குறையினை அயலில் மொழிகுவன் எனதுகுறைகளில் உணர்விலன்
எரிபொன்மணிமுடி இடறுகழலடி இறைவர் தவிதுயர் புதல்வியே. (49)

ஊரு முளபல உறவு முளஅனை உரிய தாதையும் உளவெனும்
பேணா யறவொரு பேறு மிலைஉயிர் பேதை உடல்விடு நேரமே
ஆரும் இலையிவண் ஆறு தலுதவ ஆர்வ முளவனை நீயலால்
தாளா முடிகதி ராரு மடிமதி தாழ வருமுறு மாதராய். (50)

அறுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்.

கனியை அருத்திவல் வினையில் அழுத்திய கடுபணி முடிசிதற
மனுடன் இனத்தொரு மறுவுமிலத்திரு மகள்வரு மெனுமுறையில்
அனையும் உதித்தனை அரவமிதித்தனை அமரர் பணித்தனையால்
தினமும் நினைத்துதி சிறியன் அளித்தருள் திறமை நினக்கிலையோ. (51)

விரக மிகத்தரும் அவிரு நிறத்தினர் விழிவதனத்தொளிரும்
தரள நகைக்கொடி இடைநெடு மைக்குழல் தளருநடைக்கிடையே
கருது மனத்தினன் நினது பதக்கடை கனவில் நினைத்தறியேன்
குருதி வடிந்துயர் சிலுவை மரித்தசத் குருவை வகுத்தவளே. (52)

அனைமனம் நொத்தழ அருமகர் நைந்தழ அரிவை கசிந்தழவும்
எனதுயிர் சென்றுடல் இழிபிண மென்றவர் எடுமொர் கிடங்கினையே
மணதொ டெறிந்தெழு மணலும் அறைந்தவர் வழிகள் திரும்புவரோ
இனைய தருண்டனில் இவனை நினைந்தவர் எவரும் மருங்குளரோ. (53)

நீள்கடல் தன்னிடை மேகலை கொள்நெடு நேமியில் நின்னரிய
தாள்தலை கொள்பவர் யாதகை யோரெனும் தாய்தயை யேயடையா
நாள்இலை யாமென யாருமொழிந்திடல் யானும் அறிந்திலையோ
ஆள்வது நின்றனின் பாரம லால்பிறி தாதர வீங்கிலையே. (54(

இன்மொழி யாழ்முனர் கிண்கிணி மென்சிசு இதழிருந் துதிருமொரு
புன்மொழி மீசுவை வாய்ந்தென அன்னையள் பூத்துளம் ஆர்ப்பரிப்பள்
நன்மொழி வேதியர் வானவர் ஞானிகள் நாதகீ தத்திடையில்
என்மொழி என்பெறும் ஆயினும் நீ அனை ஏற்குதல் நீதியலோ. (55)

அறுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்.

மீனை புனைந்த முடியாள்நீ வெய்யோன் அணிந்த உடலாள்நீ
மானேர் விழியார் நுதல்பொருவும் மதலை மதிபூண் அடியாள்நீ
வானோர் புகழ்அன் புடையாள்நீ வளர்நீள் முகில்செங் கொடையாள்நீ
தேனேய் கிருபைக் கடலாள்நீ சிறியேன் பிழைக்கும் படியாள்நீ (56)

தக்கார் வதிமீ தலத்தாள்நீ தளரா அமரர் தளத்தாள்நீ
மிக்கார் தொழுநன் வரத்தாள்நீ மெலியா தெழுமா வறத்தாள்நீ
புக்கா தழியும் மனுமகனைப் பொன்னங் கதிக்கண் புகுத்தாள்நீ
எக்கால் இவனை அளித்தாள்வை. இனிமைக் குயர்ந்த குணத்தாயே. (57)

படர்நோய் தணிக்க மருந்தாய்நீ பசித்தார்க் கினிய விருந்தாய்நீ
கடல்வீழ் குழவி புரந்தாய்நீ கடவுள் சுதனிற் பயந்தாய்நீ
வடிநீத் துலகிற் பிறந்தாய்நீ மகிபர் குழுவுட் சிறந்தாய்நீ
நடுவூத் திலங்க வருந்தாய்நீ நளிர்தாள் உதவி தருந்தாயே. (58)

பொன்னு டெக்கும் பொற்கோலீ பொருவாக் கனிமைப் பொலன்சீலீ
பன்னூல் புரிந்தார் பணிநூலீ பகர்தற் கரிய மறைவேலீ
உன்னை விழைவார்க் கநுகூலீ ஒருமா சிலதாய் ஒளிர்மாலீ
தொன்னோய் ஒழிப்ப வருமூலீ துணையொன் றிலந்துன் அருள்பாலி (59)

என்னோ ஏழை இரவுபகல் இடுநீள் குரல்நின் எழில்செவியில்
தென்னேர் அமரர் யாழ்குழலுள் தீங்தேன் இசையுள் கேட்டிலையோ
அன்னை சரணை யன்றியெனக் கபயம் தருவார் இங்கிலையே
இன்னும் இதனை விரிப்பதற்கென் எளிய அறிவு இடம்தருமோ. (60)

அறுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்.

பொன்மலியப் புரவலர்க்கும் புரவலனுப் பூதலத்தைப் புரப்ப தோர்கால்
அன்னவனே அரசிழந்து பலிசொரிந்து நாடுபல அலைவ தோர்கால்
இந்நிலத்தின் கதியனைத்தும் இங்ஙனமே இதுகருதி இனிச்செல்வேனோ
பின்னமில உறுதிநிலை நினதுபத மலர்களறப் பிறிதொன் றுண்டோ.(61)

புண்ணியம்என் னென்றறியேன் தவங்கிடவேன் செபம்புரியேன் பூசைகா
ணேன்,கண்ணியரை அவமதிப்பேன் அவர்பெயரைக் கெடுப்பதிலும் கனிவு
கொள்வேன், எண்ணியதர் வழிவகையின் திரவியமே பெரியதென இறு
மாப் பெய்வேன், விண்ணிலையும் அதன்நலனும் யான்உணரக் கருணை அரு
ள் விமலத் தாயே. (62)

பரத்தையர்பால் விழுமனதைப் புநிகமுயர் நினதுபதம் பதித்தே னில்
லன், சிரத்தையொடென் உடல்வளர்த்தேன் இரவலர்க்கு ஒருதுணையும்
செய்தே னில்லன், கருத்தைவிழல் வாழ்வுதனில் நிறுத்தினன்வெங் கடுநி
னைந்து கசிந்தே னில்லன், மருத்துவரைக் கண்டறியாக் கொடும்பிணியர்
படும்பாடிவ் வண்ணந் தானே. (63)

உனைக்குறித்திங் கொருதினமே நோன்பிருப்பின் தேகசுகம் ஒழியு
மென்றோ, நினைத்தபடி உணவுபல புசித்துடலின் வளர்ச்சியையான் நிறை
யும் பார்ப்பேன், கனத்தபெரும் பஞ்சம்வரப் பட்டினியால் மெய்வதங்கிக்
களைத்து வீழ்வேன், இனைத்தகுணம் அத்தனையும் பொருட்படுத்தா தளித்
தல்நின தியற்கையன்றோ. (64)

இழிகுலத்தன் கூன்குருடு செவிடுமுடம் ஊமனென இகழ்வார் இந்தப்
பழிமிகுத்த குவலயத்தார் இப்படியெ லாம்எனைநீ பழிப்பா யாமோ
பிழையொழித்த நின்னிதயத் தியைந்தபடி யானொழுகல் பிசகே னாயின்
பொழிகிருபை நிதியில்முதற் பங்கடைதல் ஒருபொழுதும்பொய்க்காதம்மே

எண்சீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்.

அமல கடவுளர் உறைவிடம் எனவரு
அருணர் பலரினும் உயரிய அழகினை
குமுத நிலவொளி யிலவிதழ் விரியுமோ
கொழுகொம் பிலமலர்க் கொடிமுடிய டையுமோ
இமைய வரும்அனை தருபணி புரிதலின்
எவரு நினதியல் இசைதர வலர்கொலோ
சமய மிதையறப் பிறிதிலை தமியனைத்
தளரல் எனமொழி வரும் இவன் இலையரோ. (66)
வனச முகமலர் மணிநகை மனைவியும்
வரத குணநிறை புதல்வரும் உதாரரும்
இனச னர்களொடு பணிகளு மிகுபல
இரத கயமொடு துரகமு நடைகளும்
கனப ரிசுகளும் முடிவினில் எனபயன்
கதிசெய் சுகம் அவை கனவினும் அருளுமோ
அனைநின் உதவியின் இனிமையை அறிகுநர்
அழியு நிலையையொர் பொழுதெனும் விழைவரோ (67)
இட்ட பயிரெனு மழையில பலன் எவன்
இறைவி தயையில இவனுறல் எவன் நலன்
கட்ட மிசைபல கவலைகள் தொடர்வதே
கருது கவினெனில் இனுமென துணைவிழல்
பட்ட புழைமறு கணைபுகல் பொருவுமோர்
பான்மை தெரிகுநர் எவர்களு மிலைபல
சட்ட முறைபுவி யறிகினும் நினதரு
தயையை நிகர்குணர் ஒருவரும் இலையரோ. (68)
விலைம கர்கனிய கனபொருள் சொரிகுவன்
மெலியும் இரவலர்க் கொருபண முதவிலன்
மலைவு விளைபல விதிகளை மொழிகுவன்
மறைசொல் நெறிமுறை யொழுகிட முனைகிலன்

175905
சென்னை-600

அலகில் புநிதனென் றுலகினர் புகழ்பெய
அகனில் பவமுற வெளியெழில் புரிகுவன்
வலையுள் விழுசிறு பறவையின் உயிரென
மருளுறு மிவன்விடு தலைபெற வருவையே. (69)

காந்து கதிரடர் தினகரன் நினதருள்
கடலின் முழுகவும் நிறைகுளிர் பெறுமெனில்
வாய்ந்த பலகொடு வினையுரம் அனையுறும்
வலமை முனர் இருள் கலையெதிர் இணையதே
ஆர்ந்த அளியடொடிவ் வளியனு முனதடி
அலரின் மதுவுன வுரிமைகொண் டிலைகொலோ
சூழ்ந்த அனலிடை மெழுகென உருகிடு
தொழும்பற் குறுதிநின் பதமலர்த் துணைகளே. (70)

எழுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்.

மண்ணி னுல்வ னைந்த தேகம் மண்ணுள் மாறிப் போமென
எண்ணி னுல்நி றைந்த மோசம் இங்ஙன் வந்து சேருமோ
கண்ணி னுல் அநேக காட்சி கண்டும் அன்ன என்னுளம்
பண்ணி னுல்மென் மேலும் இன்ன பாழு நாசம் நேருமோ (71)

தாய்வ யிற்றுள் சேயெ னத்த ரித்த அந்த நேரமே
மாயு காலம் இன்றெ னுவ ளாய நுத்தல் நேருமே
ஆய வேளை இன்னையோ அடுத்த நாளி லோவெனில்
தீய தேடியின்னு மென்றன் சிந்தை செல்தல் நன்றதோ (72)

மரண மாவ தொரு முறைவ ரூஉவ தன்றிப் பலபல
தருண மேவி எச்ச ரித்தல் சாலு மான தல்லவே
சருவ ஜீவ பூர்வ நாதன் தந்த இந்த வாழ்வையான்
கிரம மேக ழிப்ப தற்குக் கிருபை செய்வை அம்மையே (73)

தீயு லாம்பு யங்க வேடம் செய்து நின்ற பேயைநின்
தூய தாள்மி தித்து வென்ற தொன்மைமிக்க உண்மையால்
மீயு லாம்கு ளிர்ந்த சோமன் வெய்ய பாம்பிற் கஞ்சியோ
வீயு லாம லர்க் கழற் கண்வீழ்ந்து மேன்மை பெற்றதே (74)

கன்ன லைப்ப ழித்த தீஞ்சொல் கார் பழித்த நற்கொடை
முன்னி னையொ ழித்த வன்மை முடிவி லாத வரமுமேய்
அன்னை யிண்டெ ழுந்த காலை அண்டர் இங்கு சாயவும்
இன்னர் ஆங்கு செல்வ தற்கும் ஏற்ற வீதி யாயதே. (75)

கலி விருத்தம்.

எப்பா வியும்நின் தயை ஏற் குநர்கள்
தப்பார் அனை இன் அருள்தா னடைய
அப்பா வரகொஞ் சமும் அஞ் சலெனும்
நற்பா குளைகா தறும்நா ளெதுவோ. (76)

கனைபொற் றிரைசூழ் தருகா சினியில்
நினையொத் தனர்யா ருளர்நீள் துயருள்
இனும் எத் தனைநாள் இதுவே் விதமாய்
வனமத் திபொர்சே யெனவா டுவனால் (77)

நறையுற் றனபொன் னடிநம் பினெனைப்
பொறுசற் றென ஆய் சொலல்பொற் பலவே
கறையுற் றனகூன் பிறைகா லணிநீ
குறையுற் றனைசெல் கெனல்கூ டியதோ. (78)

நான்தோன் றிய அக் குலநா யகியாய்
மான்தோன் றியதா கலின்வந் தனனால்
வான்தோன் றியபன் னிருவா குயர்தண்
மீன்தோன் றியமின் முடிவேய் கனிபே. (79)

முன்னால் அதம் ஏ வைசெய்மோ சமெலாம்
உன்னால் ஒழிவாம் என ஓ தினரோ
இந்நாள் வளாகூ றினும் என் மிடிமை
தன்னால் அகலா தொருசால் புகொலோ. (80)

கலி விருத்தம்.

காய்வழியில் எய்தபவம் தாய்வழியில் வீயுமென
நாயகனுர் அன்றுரைத்த தூயமொழி சித்திபெற
மின்னுமணி பொன்மகுடர் மன்னர்பதி னெண்மர்குலம்
சென்மவினை யே யணுகாக் கன்னிமரி யாயினை நீ, (81)

தன் எதிர் இலாத அனை இன்னுதவி சற்றுமிலர்
என்னவென மோட்சசுக நன்னயங்கள் பெற்றிடுவர்
சேணுறுதல் வேணுபவர் எணியென நீவதிதல்
காணுமவர் இன்னும் இவண்வீணில் அலைகின்றதெவன்

வஞ்சவுளப் பாற்றதனை அஞ்சியுடன் ஓடிவரும்
குஞ்சுகளைக் கோழிதன தஞ்சிறையுட் காப்பதுபோல்
நீதுபுரி இவ்வுலக சூதடிகட் கியான் இரையாய்ப்
போதல் ஒழித் தேழையெனை ஆதரித்தல் நின்கடனே (83)

ஏதமுறு வேளையுயர் பாதமலர் சேர்த்திடில்நின்
மீதயையில் அற்பமெனும் கோதுறைதல் இல்லையரோ
செங்கதிரின் நீள்கிரணம் பங்கமிடை பாய்தரினும்
அங்கனவி யோர்புடையும் பங்கமடை யாததுபோல்

எல்லையில என்கொடிய தொல்லைசில் கண்ணுறினே
கல்லுமுரு கென்னில் இனும் சொல்வதெனவோ அறியேன்
பரவுமிருள் ஆளுகைநல் இரவிமுனர் மாயுநின
தருள்புரியின் பாழ்புவன மருள் இவனை வென்றிடுமோ (85)

அறுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்.

திரைத்தகை உயர்ந்த பாவலரும் திறத்தினில் மிக்க நின்மகிமை
உரைத்தர வல்லர் இல்லரெனில் உணர்க்குணம் அற்ற ஊமனிவன்
புரைத்தமிழ் கொண்டு நின்னரிய புகழ்க்குலம் நன்கு சொல்வதெவன்
சரித்திரங் கண்ட தூய்மையருள் தனிப்பட நின்ற தாய்மரியே. (86)

அனைத்தையும் தந்த நாயகனுர் அளிப்படும் அன்னை ஆகையினல்
கனைத்ததிர் நேமி சூழ்புவியும் களிப்புற மேவு யாபொருளும்
மனத்தெழு நின்றன் ஆளுகையின் வழிப்படல் கண்ட ஏழை இனி
நினைத்தொழ லின்றி மற்றவரை நினைப்பதற் கில்லை நேரிழையே (87)

கற்பழி அலகை நேசனெனும் கைப்புறு நிலைமை நீங்கிடவும்
அற்பமர் நின்றன் சீடனெனும் அர்ச்சய தானம் யானுறவும்
பற்பல வழிகள் உண்டெனினும் பக்குவ மான தோர்வழியைத்
தொற்பழி நீத்த கன்னிகை நீ சொற்றுதல் வேண்டும் இக்கணமே. (88)

இகத்துறை சிறிய பூண்டுமுதல் எவர்க்கும்நல் உணவு கொடுத்தருளும்
மகத்துவ முதல்வன் தனைவளர்த்த வரத்தொகை மிகுத்த மாமரிநின்
நகைத்தளிர் கந்த மிருதுபத நறைத்திரை மூழ்க நாடியதும்
அகத்துயர் மாயும் இதுசமயம் அதற்கருள் புரிவை அம்மணியே. (89)

இடத்திடை எழிலார் மாளிகையும் இமிர்த்திரள் கனக மணிவகையும்
கடுத்தட னெழுநாற் சேனைகளும் கணிக்கரு புவன ஆளுகையும்
உடைத்தன வொருவன் அவனரிய உளத்தினைக் கொடிய அலகைவசம்
கொடுத்தன பிறகு பயனுளவோ குளிர்ப் பிறை மிதித்த குலக்கொடியே

கொச்சகக்கலிப்பா.

மடமாதர் கொழுநரொடு மலர்விசிறிப் புனல்குடையும்
தடவாவி புடையமரத் தருவளம்கொள் ஊர் இதுவே
தருவளம்கொள் ஊர் இதுவேல் தயைநிறைமெய் முனிவரர்கள்
புகுவளம்கொள் அறம்பொதுளும் பொன்னுலகம் தேடேனோ

உண்டமது கக்குவநேர் ஒண்குயில்நற் பாகுளிற
விண்டதுணர்ச் சோலைபொழி விரைவேய்ந்த ஊர் இதுவே
விரைவேய்ந்த ஊர் இதுவேல் விண்ணர்தரு மின்னிசையில்
புரைமாய்ந்த உவகையெழும் பொன்னுலகம் தேடேனோ.

பண்ணைதவழ் சங்கினமும் பங்கயமும் ஈன்றமணித்
தண்ணொளியில் ஆம்பல் அலர் தடமார்ந்த ஊர் இதுவே
தடமார்ந்த ஊர் இதுவேல் தபனன்மதி யுடுதிகழப்
புடமார்ந்த இருள்களையும் பொன்னுலகம் தேடேனோ. (93)

துங்கர்மனத் தூய்மையுறத் தோகையர்தம் சிந்தையென
அங்கொடிகள் ஆடுகின்ற அரண்மனைகாண் ஊர் இதுவே
அரண்மனைகாண் ஊர் இதுவேல் அருள்மிகுமா தவர்பிரபை
புரிமணியேய் அணைவதியும் பொன்னுலகம் தேடேனோ 94

சிந்துவளை பூதலமார் செல்வமெலாம் உள்ளமைய
மந்திரங்கள் நின்றெழில்செய் வலனோங்கும் ஊர் இதுவே
வலனோங்கும் ஊர் இதுவேல் வடுவழிவி லாதுபடர்
பொலனோங்கு நிதிப்படைத்த பொன்னுலகம் தேடேனோ (95)

எண்சீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்.

தேடேனோ பொன்னுலகம் தேடப் போந்த
திருவழியைச் சேரேனோ சேர்வான் என்றும்
நாடேனோ நிற்கழலை நாடிப் போற்றும்
தனி யழகேய் அமரருடன் நான் ஒன்றாகப்
பாடேனோ பாடியுயர் பயன்கொண் டோங்கும்
பரிசுத்தர் நெறியினை என் பரிசதாகச்
சூடேனோ சூடியர்கான் நலனுள் இந்தத்
தொழும்பனும் ஓர் பங்குபெறத் துணைசெய் யாயோ

தார் இருந்தும் மணம் இல்லாப் பான்மைபோலும்
தடம் இருந்தும் புனல் இல்லாத் தன்மைபோலும்
கார் இருந்தும் மழையில்லா வகையைப் போலும்
கதிர் இருந்தும் ஒளியில்லா விதமே போலும்
ஆர் இருந்தும் துணையில்லை அவரைப் பின்னும்
அணுகுவதில் பலன் இல்லை என்றுகண்டே
பேர் இருந்த நினைநோக்கி வந்தேன் என்னைப்
பேணுவதுன் கடமையலால் பிறிதொன் றுண்டோ 97
தேவெழுந்த மாளிகையாய் வந்த அன்னை
திவ்வியதாட் கொருகலனைச் செய்வான் வேண்டிப்
பூவெழுந்த தாரினமோ வாடா நிற்கும்
பொலன்தரள வடமெனிலோ புழைகட் குள்ளாம்
மாவெழுந்த பொன்மிடைந்த அணியால் நொய்ய
மலர்ப்பதங்கள் கன்றுமென மதித்தே னுகப்
பாவெழுந்த மாலைதனைக் கொணர்ந்தேன் இஃதைப்
பரிவொடுநீ ஏற்பதுநின் பாரம் தாயே. (98)
போர்த்த இருட் படலமறுத் தொளியைத் தும்மிப்
பொருளனைத்தும் மகிழவரு பகலோன் மிக்க
நீர்த்தமதுக் குமுதமலர்த் துணையாம் திங்கள்
நீடுநெடுவான் நளிர்விழிநேர் உடுக்களாய
சீர்த்தபொரு வெதிரிலமா நலனை நின்றன்
திரு உடலும் பதமலரும் சிரமுங்கொள்ளப்
பார்த்தபினர் அவ்வெழிலார் அணிக்கு மேலாம்
பணியதனை யெவ்வலரோ படைத்தற் பாலார். (99)
ஓரெழுத்தும் உணராதோர் மிடியன் இன்னுன்
ஒருநூறு கவியுரைக்கும் உரிமை தந்தாய்
சீரெழுத்து முதிர்கலைஞர் துணிவை யாண்டும்
செயிர்சொல்லார் மலையலெனத் திடனைத் தந்தாய்
ஆரெழுத்து வலிமையினர் இதனை யெங்கும்
அறியாதார்க் கறிவுறுத்தும் அறிவைத் தந்தாய்
ஏரெழுத்துக் கழல்தந்தாய் அருகில் நின்றென்
இறுதியில்நற் கதியினையோர் இடம்தா ராயே. (100)

முற்றிற்று.